Australian Government
Services Australia

TAMIL

# நீங்கள் COVID-19 தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டதற்கான சான்றினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

உங்களுடைய ‘immunisation history statement’ அல்லது COVID-19 digital certificate -இன் மூலமாக நீங்கள் உங்களுடைய COVID-19 தடுப்பூசியை இட்டுக்கொண்டதற்கான சான்றினைப் பெறலாம். இந்தச் சான்றினைப் பெற நீங்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

பின் வரும் இரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி உங்களுடைய கூற்றினை அல்லது சான்றினை இணைய-வழியில் பெறுவதே மிக எளிதான வழி:

- உங்களுடைய myGov கணக்கு வழியாக
- Express Plus Medicare எனும் மொபைல் கைப்பேசிச் செயலியைப் பயன்படுத்தி.

உங்களுடைய கூற்று அல்லது சான்றினை நீங்கள் பெறுவதற்கு முன்பாக, உங்களுடைய தடுப்பூசியளிப்பு வழங்குநர் நீங்கள் தடுப்பூசி இட்டுக்கொண்டதை Australian Immunisation Register -இற்கு அறிவிக்கவேண்டும். இதற்கு 10 நாட்கள் வரை ஆகலாம்.

Australian Immunisation Register -இல் பதிவுசெய்யப்பட்டிருக்கும் நீங்கள் இது வரை பெற்றுள்ள தடுப்புமருந்துகள் அனைத்தையும் உங்களுடைய ‘immunisation history statement’ காண்பிக்கும்.

உங்களுடைய ‘COVID-19 digital certificate’ நீங்கள் இட்டுக்கொண்டுள்ள COVID-19 தடுப்பூசிகளை மட்டுமே காண்பிக்கும். ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள தடுப்பூசி ஒன்றின் வேண்டப்படும் மருந்தளவுகள் அனைத்தையும் நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு உங்களுடைய ‘மின்னாக்க சான்று’ (digital certificate)-ஐ நீங்கள் பார்க்கலாம்.

## ‘மெடிகெயர்’ வசதிக்கு நீங்கள் தகுதிபெற்றால், உங்களுடைய ‘immunisation history statement’ அல்லது COVID-19 digital certificate -ஐப் பெறும் வழி

myGov-ஐப் பயன்படுத்தி:

1. உங்களுடைய myGov -கணக்கிற்குள் செல்லுங்கள்.
2. **Proof of COVID-19 vaccination** எனும் விரைவு இணைப்பினைத் தெரிவு செய்யுங்கள்.

3. உங்களுடைய பெயரைத் தெரிவு செய்யுங்கள், பிறகு **View immunisation history statement (PDF)**-ஐ, அல்லது **View COVID-19 digital certificate (PDF)**-ஐத் தெரிவு செய்யுங்கள்.

Express Plus Medicare mobile app எனும் செயலியைப் பயன்படுத்தி:

1. இந்த செயலிக்குள் செல்லுங்கள்.
2. **Services** -இல் இருந்து **Immunisation history** -ஐத் தெரிவுசெய்யுங்கள்.
3. உங்களுடைய பெயரைத் தெரிவு செய்யுங்கள், பிறகு **View immunisation history statement)**-ஐ, அல்லது **View COVID-19 digital certificate (PDF)**-ஐத் தெரிவு செய்யுங்கள்.உங்களுடைய immunisation history statement -ஐ.

இணைய-வழியில் பெற இயலவில்லை என்றால், அல்லது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் **1800 653 809**-ஐ அழையுங்கள்.

## உங்களுடைய COVID-19 digital certificate -ஐ 'digital wallet' ஒன்றில் சேர்த்தல்

பின் வரும் வழிகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி, உங்களுடைய COVID-19 digital certificate -ஐ நீங்கள் உங்களுடைய Apple Wallet அல்லது Google Pay -யில் சேர்த்துக்கொள்ளலாம்:

- Express Plus Medicare mobile app எனும் செயலியை பயன்படுத்தி
- உங்களுடைய சாதனத்திலுள்ள 'வலையுலாவி' (browser)-யைப் பாவித்து myGov மூலமாக உங்களுடைய Medicare இணைய-வழிக் கணக்கைப் பயன்படுத்தி.

நீங்கள் the Express Plus Medicare mobile app -ஐப் பயன்படுத்துகிறீர்கள் என்றால்:

1. Services -இல் இருந்து **Immunisation history** -ஐத் தெரிவுசெய்யுங்கள்.
2. உங்களுடைய **பெயரைத்** தெரிவு செய்யுங்கள், பிறகு **View COVID-19 digital certificate**-ஐத் தெரிவு செய்யுங்கள்.
3. **Add to Apple Wallet** -ஐ, அல்லது Google Pay-யிற்கு **Save to phone** -ஐத் தெரிவு செய்யுங்கள்.

myGov மூலமாக உங்களுடைய Medicare இணைய-வழிக் கணக்கை நீங்கள் பயன்படுத்தினால்:

1. உங்களுடைய சாதனத்திலுள்ள 'வலையுலா' (browser) -வைப் பயன்படுத்தி உங்களுடைய myGov கணக்கிற்குள் செல்லுங்கள்.
2. **Medicare** -ஐத் தெரிவு செய்யுங்கள்.
3. 'தடுப்பூசி வரலாறு' எனும் கட்டத்தில் **View immunisation history** -ஐத் தெரிவு செய்யுங்கள்.
4. உங்களுடைய **பெயரைத்** தெரிவு செய்யுங்கள்.
5. **Add to Apple Wallet** -ஐ, அல்லது Google Pay-யிற்கு **Save to phone** -ஐத் தெரிவு செய்யுங்கள்.

iOS சாதனம் ஒன்றை நீங்கள் பயன்படுத்தினால், Safari அல்லது Chrome ‘வலையுலா’ (browsers)-விகளை நீங்கள் பாவிக்கலாம். Android சாதனம் ஒன்றை நீங்கள் பயன்படுத்தினால், Chrome ‘வலையுலா’ (browser)-வியை.

## நீங்கள் பாவிக்கவேண்டியிருக்கும்Medicare online கணக்கு ஒன்று உங்களுக்கு இல்லையென்றால்

Medicare online கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள, Medicare -ஐ உங்களுடைய myGov -உடன் நீங்கள் இணைக்க வேண்டும்.

**my.gov.au** எனும் வலைத்தலத்தில் உங்களுடைய myGov கணக்கில் உள்-நுழையுங்கள், அல்லது உங்களுக்கான myGov கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

இதற்குப் பிறகு, பின் வரும் இரண்டு முறைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி உங்களுடைய Medicare -ஐ நீங்கள் இணைக்கலாம்:

- உங்களுடைய Medicare இலக்கம் மற்றும் உங்களுடைய Medicare வரலாற்றில் இருந்து கிடைக்கும் தகவல்கள்
- தொலைபேசி மூலமாக அல்லது சேவை மையம் ஒன்றில் எம்மால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு இணைப்புக் குறியீடு.

Medicare -ஐ myGov-உடன் இணைப்பதற்கான உதவிக்கு **servicesaustralia.gov.au/medicareguides** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

## Medicare வசதிக்கு நீங்கள் தகுதிபெறாதவர் என்றால், உங்களுடைய immunisation history statement-ஐ அல்லது COVID-19 digital certificate-ஐ இணைய வழியில் பெறும் வழி

உங்களுடைய myGov கணக்கு வழியாக Individual Healthcare Identifiers (IHI) service எனும் சேவையைப் பயன்படுத்தி, இணைய வழியில் உங்களுடைய immunisation history statement -ஐ அல்லது COVID-19 digital certificate -ஐ நீங்கள் பெறலாம்.

உங்களுடைய அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக, பின் வரும் அடையாள ஆவணங்கள் ஒன்றிலிருக்கும் விபரங்களை நீங்கள் எமக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்:

- உங்களுடைய செல்லுபடியாகும் ஆஸ்திரேலிய விசா உள்ள உங்களுடைய கடவுச்சீட்டு
- உங்களுடைய ஆஸ்திரேலிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்.

உங்களுடைய அடையாளத்தினை நாங்கள் சரிபார்த்த பிறகு உங்களுடைய IHI -ஐ உருவாக்குவதற்கு உங்களைப் பற்றிய விபரங்களை நாங்கள் பயன்படுத்துவோம். IHI service -ஐ உங்களுடைய myGov account -உடன் நாங்கள் இணைத்தும் விடுவோம். இதற்குப் பிறகு உங்களுடைய your immunisation history statement-ஐ, அல்லது COVID-19 digital certificate-ஐப் பார்க்க உங்களுடைய IHI service -ஐ நீங்கள் பயன்படுத்தலாம்.

1. உங்களுடைய myGov கணக்கிற்குள் செல்லுங்கள்.
2. **Proof of COVID-19 vaccination** எனும் விரைவு இணைப்பினைத் தெரிவு செய்யுங்கள்.
3. உங்களுடைய பெயரைத் தெரிவு செய்யுங்கள், பிறகு **View immunisation history statement (PDF)** -ஐ, அல்லது **View COVID-19 digital certificate (PDF)**-ஐத் தெரிவு செய்யுங்கள்.

myGov மூலமாக IHI service -ஐப் பயன்படுத்தி உங்களுடைய COVID-19 digital certificate -ஐ ஒரு digital wallet -இல் நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம்.

உங்களுடைய COVID-19 தடுப்பூசியை இட்டுக்கொண்டதற்கான சான்றின் பிரதி ஒன்றையும் My Health Record-இன் மூலமாக நீங்கள் பெறலாம்.

# மேலதிகத் தகவல்களுக்கு

- Medicare சேவைகளைப் பற்றி எம்முடன் உங்கள் மொழியில் பேச 131 450 எனும் இலக்கத்தில் Translating and Interpreting Service (TIS National) -ஐ அழையுங்கள்
- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/covidvaccineproof** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்களுடைய மொழியில் தகவல்களை வாசிக்க, செவிமடுத்துக் கேட்க அல்லது காணொலிகளில் பார்க்க **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- மிகச் சமீபத்திய COVID-19 குறித்த புதுச் செய்திகள் மற்றும் அறிவுரைகளுக்கு **australia.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்
- சேவை மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள்.

குறிப்பு: உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ஆஸ்திரேலியாவில் எவ்விடத்திலும் இருக்கும் '13' இலக்கங்களுக்கு செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தபட்ட கட்டணம் அறவிடப்படும். அந்த வீதமானது உள்ளூர்த் தொலைபேசி அழைப்பிற்கு ஆகும் செலவிலிருந்து வேறுபடலாம், மற்றும் தொலைபேசிச் சேவை வழங்குநர்களிடையேயும் இது மாறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800'

இலக்கங்களுக்குச் செல்லும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசிகள் மற்றும் மொபைல் கைப்பேசிகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு நேரம் கணக்கிடப்பட்டு அதியுயர் வீதக் கட்டணங்கள் அறவிடப்படக்கூடும்.

Australian Government
Services Australia

ENGLISH

# Get proof of your COVID-19 vaccination

You can get proof of your COVID-19 vaccination status through your immunisation history statement or COVID-19 digital certificate. You do not have to pay to get this proof.

The easiest way to get your statement or certificate is online using either:

- your myGov account
- the Express Plus Medicare mobile app.

Your vaccination provider needs to report your vaccinations to the Australian Immunisation Register before you can get your statement or certificate. This can take up to 10 days.

Your immunisation history statement shows all of the immunisations you have had that are recorded on the Australian Immunisation Register.

Your COVID-19 digital certificate only shows your COVID-19 vaccinations. You will be able to see your digital certificate after you have had all required doses of a vaccine that has been approved for use in Australia.

## How to get your immunisation history statement or COVID-19 digital certificate if you are eligible for Medicare

Using myGov:

1. Sign in to your myGov account.
2. Select the **Proof of COVID-19 vaccination** quick link.
3. Select your name, and then **View immunisation history statement (PDF) or View COVID-19 digital certificate (PDF)**.

Using the Express Plus Medicare mobile app:

1. Sign in to the app.
2. Select **Immunisation history** from **Services**.
3. Select your name, and then **View immunisation history statement or View COVID-19 digital certificate**.

If you cannot get your immunisation history statement online or need help, call **1800 653 809**.

### Adding your COVID-19 digital certificate to a digital wallet

You can add your COVID-19 digital certificate to your Apple Wallet or Google Pay using either:

- the Express Plus Medicare mobile app
- your Medicare online account through myGov using a browser on your device.

If you are using the Express Plus Medicare mobile app:

1. Select **Immunisation history** from Services.
2. Select your **name**, then **View COVID-19 digital certificate**.

3. Select either **Add to Apple Wallet** or **Save to phone** for Google Pay.

If you are using your Medicare online account through myGov:

1. Sign in to your myGov account using a browser on your device.
2. Select **Medicare**.
3. Select **View immunisation history** on the Immunisation history tile.
4. Select your **name**.
5. Select either **Add to Apple Wallet** or **Save to phone** for Google Pay.

If you are using an iOS device, you can use the Safari or Chrome browsers. If you are using an Android device, you need to use the Chrome browser.

### If you do not have a Medicare online account

You need to link Medicare to your myGov account to set up your Medicare online account.

Sign in to, or create, your myGov account at **my.gov.au**

You can then link Medicare using either:

- your Medicare card number and information from your Medicare history
- a linking code we have given you either over the phone or at a service centre.

For help linking Medicare to myGov, go to **servicesaustralia.gov.au/medicareguides**

## How to get your immunisation history statement or COVID-19 digital certificate online if you are not eligible for Medicare

You can get your immunisation history statement or COVID-19 digital certificate online using the Individual Healthcare Identifiers (IHI) service through your myGov account.

You need to give us details from one of the following identity documents to verify your identity:

- your passport, with your valid Australian visa
- your Australian driver licence.

Once we have verified your identity, we will use your details to create your IHI. We will also link the IHI service to your myGov account. Then you can use the IHI service to view your immunisation history statement or COVID-19 digital certificate:

1. Sign in to your myGov account.
2. Select the **Proof of COVID-19 vaccination** quick link.
3. Select your name, and then **View immunisation history statement (PDF) or View COVID-19 digital certificate (PDF)**.

You can add your COVID-19 digital certificate to a digital wallet using the IHI service through myGov.

You can also get a copy of your COVID-19 vaccination proof through My Health Record.

## For more information

- call the Translating and Interpreting Service (TIS National) on 131 450 to speak with us in your language about Medicare services
- go to **servicesaustralia.gov.au/covidvaccineproof** for more information in English
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch videos with information in your language
- go to **australia.gov.au** for the latest COVID-19 updates and advice
- visit a service centre.

Note: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.